# வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சின் கீழ்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018

வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சின் கீழ்வரும் **அட்டவணை – I** இல் காட்டப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் **2018 ஆவணி / புரட்டாதி மாதமளவில்** யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **25.07.2018** ஆகும்.

- **அட்டவணை – I**

| பரீட்சையின் பெயர் | பதவி இலக்கம் | வெற்றிட விபரம் |
|---|---|---|
| வடக்கு மாகாண பொதுச்சேவையில் இ.தொ.சே விவசாய போதனாசிரியர் சேவையின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018 | **01** | **47** |
| வடக்கு மாகாண பொதுச்சேவையில் இ.தொ.சே விவசாய போதனாசிரியர் சேவையின் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018 | **02** | |
| வடக்கு மாகாண பொதுச்சேவையில் தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) சேவையின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018 | **03** | **71** |
| வடக்கு மாகாண பொதுச்சேவையில் நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018 | **04** | **10** |

## 02. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-

02.1 வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட **அட்டவணை – I** இல் காட்டப்பட்டுள்ள பதவிகளுக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பு / ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1817/30** ஆம் இலக்க **2013.07.03**ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கும் மற்றும் ஆட்சேர்ப்புக் காலத்தில் இவற்றில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தங்களிற்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் **அட்டவணை – I** இல் காட்டப்பட்டுள்ள பதவிகளின் தரம் III அல்லது பயிற்சித் தரத்திற்கு (விவசாயப் போதனாசிரியர்) நியமிக்கப்படுவர்.

02.2 போட்டிப் பரீட்சையில் தரம் III இற்கு சித்தி பெற்ற பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களிற்கு தகுதிகாண்கால அடிப்படையில் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு மேற்குறித்த பதவிகளின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

02.3 போட்டிப் பரீட்சையில் விவசாயப் போதனாசிரியர் பயிற்சித் தரத்திற்குரிய பரீட்சையில் சித்தி பெற்ற பரீட்சார்த்திகள் வெற்றிடத்தின் 30% ற்கு மேற்படாத அளவில் விவசாயப் போதனாசிரியர் பயிற்சித் தரத்திற்கு நியமிக்கப்படுவர். இப்பயிலுனர்கள் இப் பயிற்சிக் காலத்தில் மத்திய விவசாயத் திணைக்களத்தின் கீழான விவசாயப் பயிற்சிப் பாடசாலையொன்றில் இரண்டரை வருட கால விவசாய டிப்ளோமாவில் சித்திபெறல் வேண்டும். இக்காலப்பகுதியில் இவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுடனான கல்வி விடுமுறை வழங்கப்படும்.

02.4 இச்சேவைகள் இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்படிதல் வேண்டும்.

02.5 ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், அதே சேவை நிலையத்தில் குறைந்தது ஐந்து (05) வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றுதல் வேண்டும் என்பது கட்டாய நிபந்தனையாகும்.

02.6 பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் இது தொடர்பாகவும் அதனைத் தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமையவும் நியமனத் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

02.7 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை **அட்டவணை – I** இல் காட்டப்பட்டவாறாகும். எனினும் அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

## 03 சம்பள அளவுத்திட்டம் :-

### 03.1 விவசாயப் போதனாசிரியர் தரம் III இற்கானது

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 3 - 2016** க்கு ஏற்ப விவசாயப் போதனாசிரியர் சேவையின் தரம் - III ற்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா **31, 040 – 10 x 445 - 11 x 660 - 10 x 730 – 10 x 750 – 57, 550/-** ஆகும். (ரூபா 31,930 சம்பள படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை – II இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

### 03.2 விவசாயப் போதனாசிரியர் பயிற்சித் தரத்திற்கானது

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 அட்டவனை V இற்கு அமைவாக, (மாதாந்தப் படி மற்றும் சீராக்கற் படி என்பன வழங்கப்படும்)

1வது வருடம் - **ரூபா 21,532.00** + சீராக்கற்படிகள்

2வது வருடம் - **ரூபா 21,770.00** + சீராக்கற்படிகள் ஆகும்

### 03.3 தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) தரம் III இற்கானது

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MT 1 - 2016** க்கு ஏற்ப தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) சேவையின் தரம் - III ற்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா **29, 840 – 10 x 300 - 11 x 350 - 10 x 560 – 10 x 660 – 48,890/-** ஆகும். (ரூபா 30,440 சம்பள படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை – II இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

### 03.4 நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கானது

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 1 - 2016** க்கு ஏற்ப நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் - III ற்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா **27,140 – 10 x 300 - 11 x 350 - 10 x 495 – 10 x 660 – 45,540/-** ஆகும். (ரூபா 27,740 சம்பள படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை – II இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

## 04 பொதுவான தகைமைகள் :-

04.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

04.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

04.3 அ) விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னா் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

ஆ) விண்ணப்பதாரா் அல்லது பெற்றோா் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும் (*நேர்முகப் பரீட்சையின் போது தமது தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)

04.4 விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இப்பதவிக்காக கோரப்பட்ட **சகல தகைமைகளையும்** விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும்.

## 05. கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் :-

### 05.1 விவசாய போதனாசிரியர் சேவையின் தரம் III பதவிக்கானது:-

**(பதவி இல – 01)**

**அ) கல்வித் தகைமைகள் :-**

க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி அல்லது இலக்கியம் (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**அத்துடன்**

க.பொ.த (உ/த)ப் பரீட்சையில் விஞ்ஞானப் பாடத்துறையில் உயிரியல், இரசாயனவியல் **அத்துடன்** விவசாயம் / பௌதிகவியல் ஆகிய பாடங்களில் ஏதாவது ஒருபாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் **ஒரே அமர்வில்** சித்திபெற்றிருத்தல் வேண்டும்

**அத்துடன்**

**ஆ) தொழில்சார் தகைமைகள் :-**

1. குண்டசாலை, அக்குனகொலபிலெஸ்ஸ, பெல்வெகெர, பிபிலை, லபுதுவ, வாரியப்பொல, வவுனியா, அநுராதபுரம், கறபின்ச ஆகிய விவசாயக் கல்லூரிகளிலொன்றில் இரண்டு (02) வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

   **அல்லது**

   அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் தொழில்நுட்ப விவசாயத்தில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

   **அல்லது**

   அக்குவைனாஸ் (Aquinas) கல்லூரியில்இரண்டு (02) வருட விவசாய டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

   **அல்லது**

2. உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்படி தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களின் கருத்துக்களை அறிந்துகொண்டதன்பின் தேவை ஏற்படின் மேற்படி தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானது என மூன்றாம்நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதாவது தொழில்நுட்பத் தகைமைகள்.

   **அல்லது**

3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பின்வருவனவற்றில் பெற்றுக் கொண்ட இளமாணிப் பட்டம் ஏதாவது ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - அ. விவசாய விஞ்ஞானப் பட்டதாரி [B.Sc (Agriculture)]
   - ஆ. விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ விஞ்ஞான பட்டதாரி [B.Sc (Agriculture Technology and Management)]
   - இ. ஏற்றுமதி விவசாய விஞ்ஞான பட்டதாரி [B.Sc (Export Agriculture)]
   - ஈ. பன்னை மற்றும் இறப்பர் தொழில்நுட்ப விஞ்ஞான பட்டதாரி [B.Sc (Palm and Latex Technology)]

**இ) வயதெல்லை :-**

விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி **18 வயதிற்கு** குறையாதவராகவும், **30 வயதிற்கு** மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

### 05.2 விவசாய போதனாசிரியர் சேவையின் பயிற்சித் தரத்திற்கானது:-

**(பதவி இல – 02)**

**அ) கல்வித் தகைமைகள் :-**

க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி அல்லது இலக்கியம் (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**அத்துடன்**

க.பொ.த (உ/த)ப் பரீட்சையில் விஞ்ஞானப் பாடத்துறையில் உயிரியல், இரசாயனவியல் **அத்துடன்** விவசாயம் / பௌதிகவியல் ஆகிய பாடங்களில் ஏதாவது ஒருபாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் **ஒரே அமர்வில்** சித்திபெற்றிருத்தல் வேண்டும்

**ஆ) வயதெல்லை :-**

விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி **18 வயதிற்கு** குறையாதவராகவும், **30 வயதிற்கு** மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

### 05.3 தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) தரம் III பதவிக்கானது :-

**(பதவி இல – 03)**

**அ) கல்வித் தகைமை :-**

க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் **இரண்டிற்கு மேற்படாத அமர்வில்** மொழி அல்லது இலக்கியம் (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்)**,** கணிதம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். இதில் ஒரே அமர்வில் குறைந்தது ஐந்து (05) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

**ஆ) தொழில்சார் தகைமை :-**

1. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து இரண்டு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

2. பொது நிர்வாக அமைச்சின் 01/2012ம் இலக்க சுற்றுநிருபத்திற்கமைய இப்பதவிக்குப் பொருத்தமான துறையில் தேசிய தொழில் தகைமை மட்டம் 05 (NVQ Level – 05) தொழில்நுட்ப சான்றிதழ் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

3. மேற்படி தொழில்நுட்ப தகைமைகளுக்குச் சமமானதென மூன்றாம்நிலைத் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதாவது தொழில்நுட்பத் தகைமைகள்.

**இ) வயதெல்லை :-**
விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி **18 வயதிற்கு** குறையாதவராகவும், **35 வயதிற்கு** மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

### 05.4 நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கானது :-

**(பதவி இல – 04)**

**அ) கல்வித் தகைமை :-**

க.பொ.த (சா/த) பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

க.பொ.த (உ/த) பரீட்சையில் விஞ்ஞானப் பாடத்துறையில் ஆகக்குறைந்தது ஒரு பாடம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பொதுப் பரீட்சை மற்றும் ஆங்கிலம் நீங்கலாக)

**அத்துடன்**

**ஆ) தொழில்சார் தகைமை :-**

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து மீன்பிடியியல் / நீர்வாழ் உயிரினவளர்ப்புத் துறையில் குறைந்தது இரண்டு (02) வருட டிப்ளோமா பாடநெறியினை விண்ணப்பதாரி வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**இ) வயதெல்லை :-**

விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி **18 வயதிற்கு** குறையாதவராகவும், **40 வயதிற்கு** மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

## 06 ஆட்சேர்ப்பு முறை :-

06.1 எழுத்துப் பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் **அட்டவணை – I** இல் காட்டப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப்பரீட்சையின் போது சகல தகைமைகளும், ஆவணங்களும் பரிசீலிக்கப்படும். இதன் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

06.2 மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் வரிசை ஒழுங்கில் நிலவும் வெற்றிடத்திற்கமைவாக நியமனத்திற்கான நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்படுவர்.

06.3 விவசாய போதனாசிரியர் பதவியின் ஆட்சேர்ப்புத் தரமான தரம் III இற்கு ஆட்சேரப்புச் செய்வதற்கு தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் போதுமானதாக இல்லாத பட்சத்தில் மீதியான வெற்றிடங்கள், நிலவும் வெற்றிடத்தின் 30% இற்கு மேற்படாமல் பயிற்சித்தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்பவர்களுடாக நிரப்பப்படும்.

06.4 வெற்றிடத்தின் 03% மாற்றுத்திறனாளிகளுக்காக (வலது குறைந்தோர்) ஒதுக்கப்படும். பரீட்சார்த்தி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது மாற்றுத்திறனானது (வலது குறைவானது) தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை மூலம் நிரூபித்தல் வேண்டும்.

## 07. பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் ரூபா **500.00ஐ வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர்** அவர்களின் **"3401"** என்ற வைப்புக் கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படவும்மாட்டாது.

## 08. விண்ணப்பிக்கும் முறை :-

08.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் 1 முதல் 10 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், 11 முதல் 14 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும், ஏனையவை மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **25.07.2018** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, "**செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்**" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

08.2 ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ஒவ்வொரு பதவிக்குமென தனித்தனியான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் பரீட்சைக் கட்டணங்களும் ஒவ்வொரு பதவிகளுக்குமென தனித் தனியாக செலுத்தப்பட்டு பெறப்பட்ட பற்றுச்சீட்டு விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

08.3 விண்ணப்பம் / விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் "**விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக்**" குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

08.4 விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப் பிரதி மற்றும் முன்னோடிப் பிரதி என்பன

ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.**

08.5 விண்ணப்பங்களைச் சமா்ப்பித்துள்ள தகைமையுள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அடடைகள் அனுப்பப்பட்டதும் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் மூன்று (03) நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி பின்வரும் விபரங்களுடன் **“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்”** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல - **021 221 9939**, தொலைநகல் இல - **021 221 9940**)

**குறிப்பு :-**

கோரிக்கைக் கடிதம், விண்ணப்பப் படிவம் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்திய பிரதி, அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

08.6 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. மேலும் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம் என்பதுடன் இவை தொடர்பான அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது.

## 09. ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளா் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமா்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

## 10. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமா்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தா்ப்பத்திலும் அவா் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும்.** ஒரு அரச நிறுவனத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது நிறுவனத் தலைவர் அல்லது அவர்சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்தியபிரமாண அதிகாரி, சட்டத்தரணி, நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா 240,360.00 க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க அல்லது உள்ளூராட்சி அல்லது மாகாண உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

## 12. பரீட்சைத் திட்டம் :-

இப் பரீட்சைகள் கீழ்வருமாறு இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இது தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னா் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு பதவிக்குமான பாடவிதானங்கள் வருமாறு.

**12.1 விவசாய போதனாசிரியர் சேவையின் தரம் III மற்றும் பயிற்சித் தரம் பதவிக்கானது :-**

| *இல* | *வினாப் பத்திரம்* | *பாட விதானம்* | *நேரம்* | *புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 | உளச்சார்புப் பரீட்சை | இவ் வினாத்தாள் தர்க்கரீதியான திறன், பகுப்பாய்வுத் திறன், முடிவெடுக்கும் இயலுமை, முடிவுக்குவரும் திறன். எண், மொழி மற்றும் உருவ அமைப்பு ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்புகள் மற்றும் பிரச்சனைகளை சமாளிக்க வேண்டிய விதம் தொடர்பாக விண்ணப்பதாரியின் அறிவினை அளவிடுவதாக அமையும். | 01 மணித்தியாலம் | 100 |
| 02 | தொழில்நுட்ப ஆய்வுப் பரீட்சை | இவ் வினாத்தாள் விவசாயம் தொடர்பான புத்தாக்கச் சிந்தனைகள் மற்றும் பிரச்சனைகளை தீர்க்கும் திறன் ஆகியவை தொடர்பான விண்ணப்பதாரியின் அறிவினை அளவிடுவதாக அமையும். | 01 மணித்தியாலம் | 100 |

**12.2 தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) தரம் III பதவிக்கானது :-**

| *இல* | *வினாப் பத்திரம்* | *பாட விதானம்* | *நேரம்* | *புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 | உளச்சார்புப் பரீட்சை | இவ் வினாத்தாள் தர்க்கரீதியான திறன், பகுப்பாய்வுத் திறன், முடிவெடுக்கும் இயலுமை என்பன தொடர்பான விண்ணப்பதாரியின் அறிவினை அளவிடுவதாக அமையும். | 01 மணித்தியாலம் | 100 |
| 02 | பொது அறிவு (பதவியுடன் தொடர்புடைய தொழில்நுட்பம் மற்றும் விடய அறிவு) | இவ் வினாத்தாள் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு விவசாயத்துறையின் பங்களிப்பு, இலங்கையின் காலநிலை வலயம் தொடர்பான அறிவு, மண் மற்றும் தரவர போசணை, நெல் உற்பத்தி, ஏனைய உப உணவுப் பயிர்கள், மரக்கறி உற்பத்தி, பழவகை, பயிர்ப் பாதுகாப்பு, மண் இரசாயனம், நீர் வடிப்பும் அதன் முக்கியத்துவமும், பண்ணைத் தொழில்நுட்பம், தேனீ வளர்ப்பு, தாவர வளர்ப்பும் நில அழகுபடுத்தலும், பயிர்ச்செய்கைப் பாதுகாப்பு, கால்நடை வளர்ப்பு, விவசாய விரிவாக்கம், இழைய வளர்ப்பு, தாவர பாதுகாப்புச் சட்டம் தொடர்பான அறிவு, தாவர பாதுகாப்பு உயிரியல் தொழில்நுட்பம், விவசாய அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசனமும் நீர் முகாமைத்துவமும் போன்ற விடயங்கள் தொடர்பாக விண்ணப்பதாரியின் அறிவினை அளவிடுவதாக அமையும். | 01 மணித்தியாலம் | 100 |

**12.3 நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கானது :-**

| *இல* | *வினாப் பத்திரம்* | *பாட விதானம்* | *நேரம்* | *புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 | உளச்சார்புப் மற்றும் பொதுஅறிவு | **உளச்சார்பு :-**<br>இவ் வினாத்தாள் எண்கணித, தர்க்கரீதியான திறன் மற்றும் பொது விவேகம் தொடர்பாக விண்ணப்பதாரியின் அறிவினை அளவிடுவதாக அமையும்.<br>**பொதுஅறிவு :-**<br>இவ் வினாத்தாள் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார மற்றும் தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பில் உள்ளூர் மற்றும் சர்வதேசரீதியில் விண்ணப்பதாரியின் அறிவினைப் பரீட்சிப்பதாக அமையும். | 01 மணித்தியாலம் | 100 |

| | | | | |
|---|---|---|---|---|
| 02 | மொழித்திறன் | சுருக்கம் எழுதுதல், கிரகித்தல், பிழைகளை இனங்காணல், இலகு இலக்கண உபயோகம் ஆகியன தொடர்பான விண்ணப்பதாரியின் அறிவைப் பரீட்சிக்கும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும். | 02 மணித்தியாலம் | 100 |

**குறிப்பு** :-

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நேர்முகத் தேர்விற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது வீதத்தை (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் இப் போட்டிப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் வரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

**13. பரீட்சைப் பெறுபேறுகள்** :-

பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளம் மூலம் வெளியிடப்படும். பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

**14.** இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்துச் செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

**15.** இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**சி.ஏ.மோகன்ராஸ்.**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
25.06.2018